உ
சிவமயம்



அமரர்

# ஐயாத்துரை இந்திராணி

அவர்களின் பிரிவுகுறித்த

# நினைவு மலர்

23.08.2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



இவை

யாழ்ப்பாணம் வடமராட்சியின் கரணவாய் தெற்கு கரவெட்டியை
பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட
உயர்திரு. ஐயாத்துரை அமரர் இந்திராணி வாழ்க்கைத்
துணைவியும் ஆகிய

அமரர்

# ஐயாத்துரை இந்திராணி அவர்கள்

சிவபத மடைந்த ஞான்று
அன்னாரின் குடும்பத்தார் அவருக்கு
நற்கதியருளுமாறு குல தெய்வங்களைப் பராவியதாகப்
பாடியது நற் பாக்களும் கையறு நிலைக்கவிகளும்

# நினைவுமலர்

**23.08.2019**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வாழ்க்கைப் பயணத்தில் நற்தெய்வமாக
அன்பு நிறைந்த பேரொளியாய்
எங்கள் இதயத்தில் அணையா
விளக்காய் ஊர் போற்றும்
உத்தமியாய் தினமும்
பிரகா சித்துக் கொண்டிருக்கும்
அமரர் இந்திராணி ஐயாத்துரை
அவர்களின் பாதக் கமலங்களில்
இம்மலரை சமர்ப்பணம் செய்கின்றோம்

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

இங்ஙனம்
**குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



தோற்றம்
08.05.1950

மறைவு
24.07.2019

அமரர்

# இந்திராணி ஐயாத்துரை

## திதி நிர்ணய வெண்பா

தானம் தவங்கருணை தங்கி ஆரோகணித்து
வானம் புகுந்து வதிந்த நாள் – ஏதமிலா
ஆண்டு விகாரி வருஷ ஆடிமாத அபரபக்க ஸப்தமியில்
மாண்பு மிகு இந்திராணி சார்புவி நீத்தார் தினம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



# தோத்திரப்பாடல்கள்

## விநாயகர் துதி

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணிமின் கனிந்து.

## தேவாரம்

வேற்றாகி விண்ணாகி நின்றாய் போற்றி
மீளாமே ஆளென்னைக் கொண்டாய் போற்றி
ஊற்றாகி உள்ளே ஒளித்தாய் போற்றி
ஓவாத சந்தத் தொலியே போற்றி
ஆற்றாகி அங்கே அமர்ந்தாய் போற்றி
ஆறங்கம் நால் வேத மானாய் போற்றி
காற்றாகி யெங்கும் கலந்தாய் போற்றி
கயிலை மலையானே போற்றி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

வேண்டத் தக்க தறிவோய் நீ
வேண்ட முழுதும் தருவொய் நீ
வேண்டும் அயன்மாறி கரியோய் நீ
வேண்டி என்னைப் பணி கொண்டாய்
வேண்டி நீயாது அருள் செய்தாய்
யானும் அதுவே வேண்டின் அல்லால்
வேண்டும் பரி சொன்னுண்டென்னில்
அதுவும் உன்றன் விருப்பன்றே

## திருவிசைப்பா

நையாத மனத்தினை நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப் போந்த அன்று முதல் இன்று வரை
கையாரத் தொழுதருவி கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ? அருள் கோடைத் திரை லோக்கிய சுந்தரனே.

## திருப்பல்லாண்டு

சொல்லாண்ட சுருதிப் பொருள் சோதித்த
தூய் மனத் தொண்டருள்ளீர்
சில்லாண்டிற் சிதையுஞ் சில தேவர்
சிறு நெறி சேராமே
வில்லாண்ட கனகத்திரண் மேரு
விடங்கன் விடைப்பாகள்
பல்லாண்டென்னும் பதங்கடந்தானுக்கே
பல்லாண்டு கூறுதுமே.

## திருப்புராணம்

ஐந்து பேரி அறிவும் கண்களே கொள்ள
அளப்பரும் கரணங்கள் நான்கும்
சிந்தையே ஆகக் குணம் ஒரு மூன்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருந்து சாத்துவிகமே ஆக
இந்து வாழ் சடையான் ஆடும் ஆனந்த
எல்லையில் தனிம் பொருங் கூத்தின்
வந்த பேர் இன்ப வெள்ளத்துள் திளைத்த
மாறிலா மகிழ்ச்சியில் மலர்ந்தார்.

## திருப்புகழ்

கருத்தினால் விரகுசெல் மடமாதர்
கலக்கிமோ கனமதில் மருளாதே
ஒருத்தினாம் வகை திரு வருளாலே
உணர்ந்து நாளடிமையு முடையோனே
பருத்த தோகையில் வருமுருகோனே
பறக்கவே இயல்தெரி வயலூரா
திருத்த மாதவர் புகழ் குருநாதா
திருக்கை வேலழகிய பெருமாளே.

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க.
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

*சிவமயம்*

# அன்னார் வழிபட்ட தெய்வங்களை அன்னாரது உறவுகள் வேண்டிப் பாடிப் பராவியவை

## வெற்றி காட்டுப்பிள்ளையார் (துதி)

ஆலும் அரசும் அயலே வயல் கடல்களுமா யடர்ந்து
ஞாலஞ் செழித்திட சூழ் கரணவாய் பதிநாயகமாய்
கோலத் திகழ்வுற வீற்றிருந்தாளும் கொற்றவனே தினமும்
உள்ளம் உருகி உனைவணங்கிய இந்திராணியை
பொன்னடியிற் சேர்ப்பாய் புகுந்து,

## கரணவாய் மூத்த விநாயகர் (துதி)

குடி நடுவே குடி கொண்ட மூத்த விநாயகரே
பரம் பொருளுக்கு மாங்கனி கொண்டு பொருள் உணர்த்திய முதல் வோனே
அடியெடுத்து அடிபரவிய இந்திராணியையும் உன்
பிடி தனில் வருவித்து அருள் புரிவாய் விநாயகனே.

மூத்த விநாயகனே வேழமுகத் தானே
அல்லல் படுவோர்க்கு அருள் பாலிக்கும் நாயகனே
உனை நாடி வருவோர்க்கு காட்சி கொடுக்கும் கணபதியே
உந்தனிடம் வந்த இந்திராணிக்கு அருள் செய் விநாயகனே.

## தென்கருணையூர் முருகன் (துதி)

தெங்கும் பனையும் திகழ்வயல் யாவும் திரண்டொருங்கே
தங்கும் இடமாம் தளியதில் மேவித் தனியமர்ந்து
எங்கும் அருளைப் புரிந்தருள் எங்கள் குல முதலே
துங்கமுறும் முத்தியை எம் அன்னைக்கு ஈந்தருளே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரணவாய் நரசிங்கர் (துதி)

தட்சனின் யாகத்தை தகர்த்தெறிந்த எங்கள் குல தெய்வமே
தீய நோய்கள் வந்திடாது எமைக் காக்கும் நரசிங்கரே
காலை மாலை யுனை தரிசித்த எமது அம்மாவை
முத்தியின்பப் பேறு கிட்ட காத்தருள் வாயே.

## தொண்டைமானாறு செல்வச் சந்நிதி (முருகன் துதி)

ஆற்றங்கரையில் அமர்ந்தருள் பாலிக்கும் சந்நிதி முருகையா
அடியாரின் வேண்டுதலை நிறை வேற்றும் வேலையா
மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணுலகம் வந்த அன்னையை
உன் பார்வையால் கைலாயம் காட்டு வாயே.

## ஸ்ரீ வல்லிபுர ஆழ்வாரைப் பாடிப்பராவியவை

அஞ்சு தலை நாகமதில் ஆடும் திரு மாலே
அஞ்சு தலை நீக்கி அருளாள்க - தஞ்சமென
உன்னடியை விரைந்து வந்தார் எம் அன்னை
உன் பொன்னடியிற் சேர்ப் பாய் புகுந்து.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் இந்திராணி ஐயாத்துரை அவர்களின் வாழ்க்கைப் பயணம்

வடமராட்சி மண்ணில் கரணவாய் தெற்கு என அழைக்கப்படும் கருணையம் பதியில் சபாதி - பசுபதி தம்பதியினருக்கு இளைய மகளாக வந்துதித்தவரே திருமதி இந்திராணி ஐயாத்துரை அவர்கள்.

இந்திராணி அவர்கள் தமது மூத்த சகோதரிகளான அமரர் திருமதி பார்க்கியம் ஐயாத்துரை மற்றும் திருமதி பரமேஸ்வரி கோபால கிருஷ்ணபிள்ளை ஆகியோருக்கு பின் சுமார் 13 வருடங்களின் பின் பிறந்தமையால் தாய் தந்தையினருக்கும் சகோதரிகளுக்கும் செல்லப்பிள்ளையாக "தேவி" என்னும் செல்லப் பெயருடன் தன் இளமை காலத்தில் மிகவும் குதூகலமாக சுற்றத்தாருடன் வலம் வந்தார்.

அன்னார் தன் ஆரம்ப கல்வி முதல் இடைநிலைக் கல்வி வரை யா/ கரணவாய் மகா வித்தியாலயத்தில் கல்வி கற்றார் நகைச்சுவை உணர்வும் மற்றையோருக்கு உதவும் எண்ணம் கொண்ட அன்னாருக்கு நண்பிகள் வட்டம் பெரிதாக இருந்தது. எப்போதும் தன் நண்பிகள் படை சூழ மிக்க மகிழ்வுடன் தன் பாடசாலைக் காலத்தை அனுபவித்தார். இதன் பின்னர் அன்னாரின் விருப்பத்துக் கிணங்க கரணவாய் மகா வித்தியாலயத்தின் அருகாமையில் இயங்கிய நெசவாலையில் வேலைக்கு சேர்ந்தார் வேலை செய்யும் காலத்தில் அவரின் "செய்வன திருந்த செய்யும்" இயல்பு காரணமாக வேலையில் வல்லவராகவும் எல்லோருடன் அன்பாகவும் உண்மையாகவும் பழகும் பண்பு காரணமாக நிறைந்த நண்பிகளை கொண்டவராகவும் இருந்தார், அங்கு வேலை செய்த காலத்தை பிற்காலத்தில் அடிக்கடி நினைவு கூர்ந்து மகிழும் அளவிற்கு அக் காலத்தை மிக்க சந்தோசமாக அனுபவித்து வந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1975ம் ஆண்டு அந்தணர்த்திடலை பிறப் பிடமாக கொண்ட திரு அமரர் வேலுப்பிள்ளை தம்பதிகளின் புதல்வர் வேலுப்பிள்ளை ஐயாத்துரை (கட்டிட திணைக்களம் யாழ்ப்பாணம்) அவர்களை கரம் பிடித்தார். திருமணத்தின் பின் தன். நெசவு வேலையை விட்டு விலகி முழுமையான இல்லத்தரசியானார். அவர் தனது இனிய இல்லற வாழ்க்கையின் பயனாக பிரதீபன் ஜெயதீபன், ஜெயப்பிரபா, குலதீபன் என மூன்று புதல்வர்களையும் புதல்வி ஒருவரையும் பெற்றெடுத்தார்.

பிள்ளைகளை சிறப்புற வளர்த்து வரும் காலத்தில், நாட்டின் அசாதாரண சூழல் காரணமாக மூத்த புதல்வன் அவர்களை தனது விடா முயற்சியினால் லண்டனுக்கு அனுப்பி வைத்தார். இரண்டாவது மகன் ஜெயதீபனை பல்கலைக்கழகம் அனுப்பி படிக்க வைத்து பௌதீக துறையில் அவர் வகுப்பில் தேறி விரிவுரையாளராக வந்ததினைக் கண்டு அளவற்ற மகிழ்ச்சி அடைந்தார்.

அன்னார் அவர்கள் தக்ககாலத்தில் தன் புதல்வர்களுக்கு ஏற்ற துணைகளை தேடி சேர்த்து வைத்தார். பிரதீபன் - தவசோபன ஜெயதீபன் - நிசாந்தினி, ஜெயப் பிரபா - சிறிகாந்தன் தம்பதிகள் லண்டனிலும் குலதீபன் - பிருந்தா அவர்களைத் தன்னுடன் ஊரிலும் சிறப்புற வாழ்வதைக் கண்டு அக மகிழ்ந்தார். பேரப் பிள்ளைகளின் பிறப்பின் போது அவர்களை கண்டு மகிழ்ந்து, பராமரிப்பதற்காக இரு முறை (2003இலும் 2006இலும்) லண்டன் மாநகரம் சென்று வந்தார்.

அமரர் இந்திராணி அவர்கள் இயல்பாகவே இரக்க குண மிக்கவரும், மற்றவர்களுக்கு உதவும் குணமும் உள்ளவராவார். அன்னாரின் மூத்த சகோதரி பாக்கியம் அவர்கள் இறந்தபின்னர் அவர்களின் பிள்ளைகளை தன் பிள்ளைகளாக கருதி தானாகவே முன் வந்து ஒரு தாயாக இருந்து அவர்களின் இன்ப துன்பங்களில் பங்கு கொண்டு வந்தார். தாயை இழந்த அக்காவின் பிள்ளைகளுக்கு இதுவரை தோன்றாத் தாயாக இருந்தவராவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன் பிள்ளைகளினது நலம் தான் தன் நலம் என வாழ்ந்த அமரர் வாழ்வில் அவரின் இளைய புதல்வன் குலதீபன் அவர்களின் துணைவியான பிருந்தா குலதீபன் (தாதிய உத்தியோகத்தர் மந்திகை) அவர்களின் அகாலமரணம் (27.01.2019) பேரிடியாக வந்திறங்கியது. தன் செல்வப் புதல்வன் வாழ்வு இப்படி ஆயிற்றே என்று சொல்லி அழுதார் துன்பமுற்றார். உணவு, உறக்கம் மறந்தார். தன் பேரப்பிள்ளை குயின்சிகாவை பார்க்கும் போது, பிள்ளையின் நிலையை எண்ணி அவர் தீரா நோவுற்றார். நோயுற்ற காலத்தில் கணவர், பிள்ளைகள் பெறா மக்கள் சகோதரி உறவினர் அனைவரும் அவருக்கு உறுதுணையாக நின்று ஆதரவளித்து வந்தனர். தன் மகன் குலதீபனையும் பேரப்பிள்ளை குயின்சிகாவை கருத்திற் கொண்டு தன் நோயை வெற்றி கொள்வதற்கு கடுமையாக போராடினார். தன் பிள்ளைகளின் நலனுக்காக தான் நினைத்த வற்றை எல்லாம் சாதித்து வெற்றி கொண்ட அந்த தாய் இறுதியில் இயற்கையின் நியதிப்படி எமனிடம் தோற்றுவிட்டார், அன்னார் இவ்வுலகை விட்டு நீங்குவார் என யாரும் எதிர் பாராத நிலையில் 2019.07.24 அன்று இறைவனடி சேர்ந்தார். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய நாம் இறைவனைப் பிரார்த்திப்போம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னாரின் உறவுகளின் உள்ளக் குமுறல்

### கணவன் ஐயாத்துரை
### விம்மும் கண்ணீர்

மங்கலமா மணிதந்து மகிழ்ந்த நாள் நினைவினை
மனத்தெண்ணி ஏங்கியழவோ
மக்களைப் பெற்றுயர் வாழ்வு பெற நாளும் நீ
மலைந்ததை நினைந்து மழவோ
செங்கை கொண்டுணவூட்டிச் சீராட்டி மக்களைக்
சிறப்பித்த தற்கழவோ
சிறிது மெனக் கோபமே காட்டிடா தன்புடன்
திகழ்ந்ததை நினைந்து மழவோ.

இங்கு நீ வாழ்வுடன் போய்விடத் தனியனாய்
இரங்கு நிலைக் காயழுவனோ
இது வேண்டுமென்னுமுன் இந்தா வெனும் குரலை
என்று தான் நான் கேட்பதோ
கங்கையணி ஈசனார் கமலவடி தேடியோ
கடிதிலே ஓடிவிட்டாய்
கண்கசிய நெஞ்சுருக வெந்தழிய விட்டனை
காலமெல்லாம் துயரமே.

### பிள்ளைகள்:- பிரதீபன் (லண்டன்), ஜெயதீபன் (லண்டன்) ஜெயப்பிரபா (லண்டன்), குலதீபன்
### (விம்மும் கண்ணீர்)

அன்பு மழை நீராட்டி அமுத மூட்டி
அங்கையில் ஏந்திமடி மீது வைத்து
இன்ப நிறை மொழிபேசி வளர்த்தாயே
எல்லோரும் அருகிருந்து பணிகள் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் பிறந்தால் ஆற மனம் ஆகும் ஆனால்
புலம் பெயர்ந்து போன நேரமதில் மாண்டீரம்மா
துன்பமிது தாங்கரிது துடிக்கிறோம் நாம்
சோக வெள்ளம் துணையாகத் துவண்டோமம்மா.

மண்பொருந்து வாழ்வெல்லாம் காட்டி நல்ல
மன நிறைவுமண வாழ்வும் காட்டி என்றும்
பண்பு தங்கு குணத்தாயாய் நடந்து காட்டி
பாரிலெம்மை உயர்த்திவிட்ட தாயே இன்று
விண் பொருந்த நடத்து விட்டா யென்றபோது
வெடித்திதயம் சிதறிவிட வெம்பி வெம்பிக்
கண்பொருந்து, நீரெல்லாம் சிந்திமாய்ந்து
கதறினோம் ஆறவழி காணோமம்மா.

## சகோதரி:- கோ. பரமேஸ்வரி (விம்மிய கண்ணீர்)

தேடரும் அன்பின் சோதரி திடுமென ஓடிப்போக
வாடியே வதங்கி இங்கே வயிறலைத் தழுகிறோம் நாம்
கூடியே கலங்க விட்டு கடவுளரடியோ தேடி
ஓடினை ஓலமிட்டு உலைகிறோம் அலைகிறோமே.

## மருமக்கள்:- தவசோபனா (லண்டன்), நிசாந்தினி (லண்டன்), சிறீகாந்தன் (லண்டன்), (ஏங்கித்துடித்தவை)

எத்தருணம் என்றாலும் உனை அழைத்தால் எம்மை
ஆவலோடாதரித்தே - நிதம்
புத்தம் புதுக்கதை கூறி உள்ளம் பூரிப்பாய்
பூரித்தோம் அன்றே புவியினிலே
சித்தம் கலங்கிடும் வேளை தன்னில்
சீவ காருண்ணிய மாமியாய்
மெத்தக் கனவெனவே கண் மூடினை யோகார்
மேகமெனக் கண்கள் இருளு தையோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பேரப்பிள்ளைகள்:- திவிக்கா (லண்டன்), ஹெஸ்னா (லண்டன்), ஹெசிக்கா (லண்டன்), தனோஜன் (லண்டன்), ஆருஷன் (லண்டன்), நசானா (லண்டன்), சுஜீவன் (லண்டன்), குயின்சிக்கா**

**(அலறும் கண்ணீர்)**

மண்ணதனை அளைந்து விளையாடக் கண்டால்
மனம் துடித்தே ஓடிவந்து தூக்கிக் கொஞ்சி
உண்ணவென ஊட்டி வளர்த்திட்டாயின்று
உயிர் போன தென்று அழுகிறார்கள் ஊரார்
கண்ணிரண்டும் கசிந்தழுது நிற்கிறோமே
கதைசொல்ல யாருண்டு இதனை நாளும்
எண்ணிமனம் கருகிடுமே என் றெண்ணாமல்
எங்கோடிப் போய்விட்டீர் ஏங்குகின்றோம்.

## பெறாமக்கள்

**(அழுத கண்ணீர்)**

பெற்ற மக்கள் போன்றே
பெறாமக்கள் மீதிலே
உற்ற பாசம் உடையவரே
உவகையோடு வரவேற்பீர்
வற்றாத துயரம் தந்தே
வானுலகம் சென்றதும் ஏனோ
பற்றுக் கொண்டதாலோ
பாங்கிழந்து நாமும் அழுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மைத்துனி:- கனகம்மா வடித்த கண்ணீர்

எங்கள் திருக்குலத்தி லேயுதித்த மைத்துனியே
பங்கமிலாத் தேனே பரவரிய - சங்கை செறி
மைத்துனியே எம்மை மறந்தீரோ ஐயையோ
எத்தினத்திற் காண்போம் இனி.

எங்குடும்பந்தனிற் புகுத்து இதயமதிலே
என்றென்றும் நிறைந்திருந்த இனியவனே
பொங்கு மன்பு பொலிந்திடவே புத்தி கூறி
பொருத்த முறத் தருண மறிந்துதவி வாழ்வில்
பங்கொண்டு பரிவுடனே கூடி வாழ்ந்த
பரிவுடனே எங்கள் இந்திராணி மைத்துனியே
இங்கினி நாம் உங்களைப்போல் எவரைக்காண்போம்
இழப்பறிந்து ஏங்கி உருகிறனே.

## உற்றார், உறவினர், அயலவர் (புலம்பல்)

அன்பு கசிந்திடும் நெஞ்சினள் நீதி அறிந்தவள் நீ
இன்பம் பெருகிட நின்றனை இன்று பிரிந்துவிட
துன்பம் மிகுந்தது சோகம் படர்ந்து துடித்தனம் விண்
இன்பம் பெற வென வோடினை வாடினம் இங்கு நாம்

## தேற்றம்

கறந்த பால் முலைக் காம்பிற் புகுவதுண்டோ
கடைந்த வெண்ணெய் மோருடனே கலப்பதுண்டோ
விட்ட உடல் தன்னில் உயிர் வருவதுண்டோ
விழுந்த மலர் பூங்கொடியிற் சேர்வதுண்டோ
இரவிமதி தெற்கு வடக்கு உதிப்பதுண்டோ
அட்ட புகழ் பெற்றவரும் பூவுலகில் நிலைப்பதுண்டோ
கன்று ஞானம் சாதுவான இந்திராணியும் தாவினார்
கயிலைசோக நீக்கியே சாந்தி! சாந்தி!! யென்றோதுவீர்

**சேகர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை பற்றிய சில....

- தேசிய மரம் - நாகமரம் (மெசுவா நாக சூரியம்)
- தேசிய மலர் - நீலோற்பமலர்
- தேசிய பறவை - காட்டுக்கோழி
- தேசிய மிருகம் - யானை
- தேசிய விளையாட்டு - கரப்பந்தாட்டம்
- தேசிய கொடி - வாளேந்திய சிங்கம்
- தேசிய கீதத்தை இயற்றியவர் - ஆனந்த சமரக்கோன்
- நிர்வாக மாவட்டங்கள் - 25
- தேர்தல் மாவட்டங்கள் - 22
- கூடுதலான மாவட்டம் கொண்ட மாகாணம் - வடக்கு
- இலங்கையின் பரப்பளவு - 65525Km²
- நிலப்பரப்பில் கூடிய மாவட்டம் - அநுராதபுரம் (7180Km²) (10472Km²)
- நிலப்பரப்பில் குறைந்த மாவட்டம்- கொழும்பு (700Km²)
- இலங்கையின் குடாநாடு - யாழ்ப்பாணம்
- மிகக் கூடிய மழைவீழ்ச்சி பெறும் இடம் - அம்பாந்தோட்டை
- மிக நீளமாக ஆறு - மகாவலிகங்கை 335Km
- மிகப் பெரிய பூந்தோட்டம் - பேராதனை
- மிக உயரமான மலை - பீதுறுதாலகால உயரம் 2524Km
- மிக உயரமான மேட்டுநிலம் - ஹற்றன்
- மிக உயரமான குன்று - கொக்காகல
- மிக உயரமான நீர்வீழ்ச்சி - பப்பரகந்தை உயரம் 240m
- மிகப் பெரிய குளம் / ஏரி - சேனநாயக்கா, சமுத்திரம்
- மிக நீளமான பாலம் - வேலணை புங்குடுதீவுப் பாலம் நீளம் 3 மைல்
- கலாச்சார / முக்கோண வலயங்கள் - அநுராதபுரம், பொலநறுவை
- பெரும் குளங்களை முதலில் கட்டிய மன்னன் - வசபன்
- இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம் - திருகோணமலை
- முதலாவது தமிழ்துறைப் பேராசிரியர் - சுவாமி விபுலானந்தர்
- தமிழ் மொழியில் முதன் முதலில் வெளியான பத்திரிகை - உதயதாரகை
- சிங்கள மொழியில் முதன்முதலில் வெளியான பத்திரிகை - சிங்களஹூட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☞ இந்துமதத்தின் மேம்பாட்டிற்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் - ஆறுமுகநாவலர்

☞ பௌத்த மதத்தின் மேம்பாட்டிற்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் பாடுபடட்வர் - அநாகரிக தர்மபால

☞ இஸ்லாமிய மதத்தின் மேம்பாட்டிற்காகவும் மறுமலர்ச்சிக்காகவும் பாடுபட்டவர் - M.C.சித்திலெப்பை

☞ இலங்கைக்கு வந்த முதல் ஐரோப்பியர் - மார்க்கோ போலோ

☞ இலாங்கைக்கு வந்த முதல் அரபியர் - இபன்பதுதா

☞ முதலாவது பெண்கள் பாடசாலை - உடுவில் மகளிர் கல்லூரி

☞ பௌத்தமதம் உருவாகி வளர வித்திட்டவர் - மகிந்த தேரோ

☞ சிங்கள மொழித்துறைக்கு அளப்பரிய பெரிய சேவை செய்தவர் - இலக்கிய பேராசிரியர் எதிர் வீரசரத் சந்திர

☞ பாக்கு நீரிணையை முதலில் நீந்திக் கடந்தவர் - மு. நவரத்தினசாமி

☞ இலங்கையின் தேசிய பத்திரிகை ஒன்றின் ஆசிரியராக கடமையாற்றிய முதல் பெண்மணி - ரீட்டா செபஸ்ரியன்

☞ வர்தமாணி - அரசின் நிர்வாக ரீதியான செய்திகளைத் தாங்கி வெளிவரும் அதிகார பூர்வமான ஏடு இதுவாகும்.

☞ இலங்கை பாராளுமன்றத்தில் உறுப்பினர்களால் ஆற்றப்படும் உரைகளைப் பதிவு செய்து நூல் உருவில் வெளியிடும் ஆவணம் - வறன்சார்ட்

**இலங்கையின் பிரதான உற்பத்திகள் நடைபெறும் இடங்களும் இதர முக்கிய இடங்களும்**

☞ பிறிமா ஆலை - திருகோணமலை

☞ சோயா ஆராய்ச்சி நிலையம் - பல்லேகல

☞ விவசாய நெல் ஆராய்ச்சி நிலையம் - மகாஇலுப்பலாம், பத்தலேகொட, ஹிங்குராகொட, தலாவாக்க

☞ தேயிலை ஆராய்ச்சி நிலையம் - தலவாக்கல

☞ தெங்கு ஆராய்ச்சி நிலையம் - லுணுவில

☞ இறப்பர் ஆராய்ச்சி நிலையம் - அகலவத்த

☞ வைத்திய ஆராய்ச்சி நிலையம் - கொழும்பு

☞ புற்றுநோய் வைத்தியசாலை - மஹரகம

☞ ஆயுள்வேத வைத்திய ஆராய்ச்சி நிலையம் - நாவின்ன

☞ பெற்றோலிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் - சபுகஸ்கந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஒட்டுப்பலகை தொழிற்சாலை - ஜின்தோட்ட
- இரும்புருக்கு தொழிற்சாலை - ஒருவெல
- ரயர், ரியூப் தொழிற்சாலை - களனி
- சீமெந்து - புத்தளம், காலி, காங்கேசன்துறை
- காகிதத் தொழிற்சாலை - வாழைச்சேனை, எம்பிலிப்பிட்டிய, ராஜாங்கன
- மட்பாண்டம்/பீங்கான் - பிலியந்தல, கொழும்பு
- உலோக / மண்வெட்டி ஆலை- துல்கிரிய, பூகொட, வியாங்கொட வெள்ளவத்தை
- தோற்பொருள் - மட்டக்குளிய
- கட்டிப்பால் தொழிற்சாலை - பொலநறுவ
- பால் பதனிடல் தொழிற்சாலை - அம்பேவல
- இறப்பர் பால் தொழிற்சாலை - மாவனல்ல
- கனிப்பொருள் சுத்திகரிப்பு ஆலை - புல்மோட்டை
- சீனித் தொழிற்சாலை - கந்தளாய், ஹிங்குரான, பெலவத்தை
- இரசாயன தொழிற்சாலை - பரந்தன்
- விவசாய கால்நடை ஆராய்ச்சி நிலையம் - மகா இலுப்பலம்
- இரத்தினக்கல் கிடைக்குமிடங்கள் - இரத்தினபுரி, எலஹற
- அபடைட் கிடைக்குமிடம் - எப்பாவல
- இல்மனைற் கிடைக்குமிடம் - புல்மோட்டை
- தனியார் வைத்திய கல்லூரி - கொழும்பு வடக்கு
- அரசின் சுதேச வைத்திய கல்லூரி - பொரளை
- கைத்தொழிற்பேட்டை - ஹக்கல, அச்சுவேலி
- பறவைகள் சரணாலயம் - குமண
- யானைகள் சரணாலயம் - பின்னவெல
- வனவிலங்குகள் சரணாலயம் - யால, வில்பத்து, றுகுணு, உழுவளவ, லசுஷகல
- செய்மதித் தகவல் தொடர்பு நிலையம் - பாதுக்கை
- தாவரவியற் பூங்காக்கள் உள்ள இடங்கள் - பேராதனை, ஹக்கல, கனேவத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி

❖ வேலுப்பிள்ளை + பொன்னம்மா
- → ❖ ஆறுமுகம் + ❖ அன்னம்மா
- → ❖ சின்னம்மா + ❖ சின்னத்தங்கம்
- → ❖ குட்டித்தம்பி + கனகம்மா,
- → ஐயாத்துரை + இந்திராணி

❖ சபாபதி + ❖ பசுபதி
- → ❖ பாக்கியம்
- → பரமேஸ்வரி
- → **இந்திராணி**

ஐயாத்துரை + இந்திராணி
- ↓ பிரதீபன் (லண்டன்) + தவசோபன → திவிக்கா, றெஸ்னா, றெசிக்கா
- ↓ ஜெயதீபன் (லண்டன்) + நிசாந்தினி → தனோஜன், ஆருஷன்
- ↓ ஜெயப்பிரபா (லண்டன்) + சிறிகாந்தன் → நசானா, சுஜீவன்
- ↓ குலதீபன் + ❖ பிருந்தா → குயின்சிக்கா

❖ அமரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

திருமதி இந்திராணி ஐயாத்துரை ஆகிய எமது குடும்பத்தலைவி அவர்களின் பிரிவு அறிந்து நேரில் வந்து ஆறுதல் கூறியோருக்கும். அனுதாபச் செய்தி அனுப்பி யோருக்கும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித் தோருக்கும்.

இறுதியாத்திரையின் போது கலந்து கொண் டோருக்கும். அந்தியேட்டி சபிண்டீகரண கிரியைகளை சிறப்புற நடாத்தித் தந்த அந்தணர் கட்கும். இவ்வேளையில் கலந்து கொண்ட அனைவருக்கும். இம்மலரினை ஆக்கிய சேகர் அவர்கட்கும். இம்மலரினை அச்சிட்ட பதிப்பகத் தாருக்கும். மேலும் அனைத்து உள்ளங்கட்கும் எம் குடும்பத்தின் சார்பில் இதய பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

ஜெயபவனம்
கரணவாய் தெற்கு
கரவெட்டி

இங்ஙனம்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்

எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ,
அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையது எதை இழந்தாய்
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய்?
அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருக்கிறாய்?
அது வீணாகுவதற்கு
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதைக் கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள் அது வேறொருவருடையதாகிறது.



இந்த மாற்றம் உலக நியதியாகும்.

பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்



தமிழ்ப்பூங்கா - 021 2264014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org